**பலாகல பிரதேச சபை - 2023**
**------------------------------------------------**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

பலாகல பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக் கூற்றுக்கள் பலாகல பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக் கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றதுஇ

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல,

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்,

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1. கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் ரூபா. 4,208,656 கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய மூலதன மானியம் கணக்கீடு செய்யப்பட்டிருக்காததால் மூலதன மானியம் ரூபா. 4,208,656 இதனால் குறைவாக இருந்தது. | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என்பது. | சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டில் பேக்கரி பொருட்கள் மீதி இருப்பு ரூபா. 119,838 ஐ பேக்கரி மூலப்பொருள் விற்பனைக் கணக்கில் செலவு வைப்பதற்குப் பதிலாக திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட்டதனால் மீளாய்வாண்டில் விரிவான வருமானம் அந்தத் தொகையினால் அதிகரித்திருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | மீளாய்வாண்டில் தண்ணீர் போத்தல் விற்பனை செலவு ரூபா. 97,724 உம், எழுது கருவிகள் செலவு ரூபா. 12,600 உம் மற்றும் மின்சார இருப்பு செலவு ரூபா. 4,448 உம் விரிவான வருமானக் கூற்றில் கணக்கீடு செய்யப்படாததால் விரிவான வருமானம் அந்தத் தொகையினால் குறைவடைந்து இருந்தது. | முடிக்கப்பட்ட போத்தல்கள் மற்றும் வெற்றுப் போத்தல்களின் பெறுமதியினை ஒன்றாகக் கணக்கீடு செய்யப்பட்டதனால் இந்த வழு ஏற்பட்டுள்ளது என்பது. | - மேற்படி - |
| (ஈ) | மீளாய்வாண்டில் கொங்கிரீட் பொருட்கள் விற்பனை செலவு ரூபா. 63,325 விரிவான வருமானக் கூற்றில் மற்றும் கொங்கிரீட் உற்பத்தி வியாபாரம் மற்றும் இலாப நட்டக் கணக்கில் கணக்கீடு செய்யப்பட்டிருக்காததால் விரிவான வருமானம் அந்தத் தொகையினால் குறைவடைந்து இருந்தது. | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என்பது. | - மேற்படி - |

### 1.6.2. இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 02 உருப்படிகளுக்கு உரியதாக மீளாய்வாண்டில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று மற்றும் பேரேட்டுக்கு அமைய பெறுமதி ரூபா. 11,893,503 ஆன போதிலும் அட்டவணைக்கு அமைய பெறுமதி ரூபா. 11,234,111 ஆக இருந்ததால் ரூபா. 659,392 வித்தியாசம் காணப்பட்டது. | சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | அட்டவணைகள் நேரொத்த அறிக்கையுடன் இணங்குதல் வேண்டும். |
| (ஆ) | 03 உருப்படிகளுக்கு உரியதாக மீளாய்வாண்டில் காசுப் பாய்ச்சல் கூற்றுக்கு அமைய பெறஉமதி. | - மேற்படி - | - மேற்படி - |

17,994,249 ஆன போதிலும் குறிப்புகளுக்கு அமைய அந்தப் பெறுமதி ரூபா. 18,549,872 ஆனதால் ரூபா. 555,623 வித்தியாசம் காணப்பட்டது.

### 1.6.3. கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| குடிநீர் போத்தல் மற்றும் நீர் செயற்திட்டத்தில் இணைந்த உற்பத்தி மற்றும் இலாப நட்டக் கணக்கில் இனம் காணப்பட்ட நிறுவன நிர்வாகம் மற்றும் விற்பனை செலவு ரூபா. 425,928 தொடர்பான விபரங்கள் முன்வைக்கப்படாததால் கணக்காய்வில் அது தொடர்பாக திருப்திகரமான கண்காணிப்பு செய்ய முடியாது இருந்தது. | செலவுகளை வெவ்வேறாக இனம் காணக்கூடிய வகையில் ஆவணங்கள் பராமரிக்கப்படவில்லை என்பது. | உறுதிப்படுத்தல்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதி கூற்றுக்கு அமைய 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் செலவை விஞ்சிய வருமானம் ரூபாய். 2,825,621 ஆக இருந்ததுடன், அதற்கு மாறாக முன்னைய ஆண்டில் வருமானத்தை விஞ்சிய செலவு ரூபாய். 6,674,235 ஆக இருந்தது.

### 2.2. நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்று இருந்த முத்திரைக் கட்டணம் ரூபா. 2,259,150 உம் மற்றும் நீதிமன்ற தண்டம் ரூபா. 6,890,513 உம் வருமான உற்பத்தி செயற் திட்டங்களில் ஈடுபடுத்தப்படாது அமைய ஊழியர்களின் சம்பளம் கொடுப்பதற்கு ஈடுபடுத்தப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என்பது. | இந்த நிதி வருமான உற்பத்தி செயற்திட்டங்களுக்கு ஈடுபடுத்தப்படுதல் வேண்டும். |

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களுக்கு அமைய மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரிய மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 ஆம் திகதியில் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 ஆம் திகதியில் மொத்த நிலுவை |
| | -------- | -------- | -------- | -------- | -------- | -------- | -------- | -------- | -------- |
| | | ரூபாய். | ரூபாய். | ரூபாய். | ரூபாய். | ரூபாய். | ரூபாய். | ரூபாய். | ரூபாய். |
| (i) | வீத வரி மற்றும் வரி | 1,582,470 | 1,772,920 | 1,743,040 | 29,880 | 1.559,450 | 1,632.460 | 1,648.660 | - |
| (ii) | வாடகை | 2,553,893 | 2,915,370 | 2,379,300 | 1,926,870 | 2,064.960 | 2,137,903 | 2,257,953 | 1,390,800 |
| (iii) | அனுமதி பத்திர கட்டணம் | 271,220 | 293,890 | 293,890 | - | 306,995 | 267,175 | 268.175 | - |
| (iv) | ஏனைய வருமானங்கள் | 39,463,360 | 15,997,115 | 11,211,463 | 12,921,891 | 34,132,300 | 13,605,759 | 10,308,586 | 8,136,239 |
| | | -------------- | ------------------ | ------------------ | ------------------ | ------------------ | ------------------ | ---------------- | -------------- |
| | | 43,870,943 | 20,979,295 | 15,627,693 | 14,878,641 | 38,063,705 | 17,643,297 | 14,483,374 | 9,527,039 |
| | | ======= | ======= | ======= | ====== | ======= | ====== | ======= | ====== |

### 2.3.2 வருமான சேகரிப்பு செயலாற்றுகை

சபையின் வருமான சேகரிப்பு செயலாற்றுகை தொடர்பான அவதானிப்புகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வாடகை** | | |
| (i) | 2019 - 2023 வரையான வருடங்களில் மாதம் ஒன்றுக்கு குத்தகைக்கு வழங்கியமைக்காக அறவிடப்பட வேண்டிய வாடகை ரூபா. 1,869,450 அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என்பது. | நிலுவைத் தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 2021 ஆம் ஆண்டில் சபைக்குச் சொந்தமான வாகனங்களை வாடகைக்கு வழங்கியதற்காக அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா. 755,100 ஐ 2023 ஆம் ஆண்டிலும் அறவிட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | - மேற்படி - |

**(ஆ) ஏனைய வருமானங்கள்**

| | | | |
|---|---|---|---|
| (i) | 2021, 2022 ஆம் ஆண்டுகளுக்கு உரியதான பல்வேறு விநியோகங்களுக்காக சபைக்குக் கிடைக்க வேண்டிய ரூபா. 688,768 ஐ 2023 ஆம் ஆண்டிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய தொகையினை அறவிடுவதற்காக நடுவர் மன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்பது. | - மேற்படி - |
| (ii) | மாகாண சபை பிரதான செயலாளரிடமிருந்து மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் பெற்றுக் கொள்ளப்பட வேண்டியிருந்த நீதிமன்ற தண்டம் ரூபா. 10,887,387 உம் முத்திரைக் கட்டணம் ரூபா. 525,000 உம் ஆகும். | 2022, 2023 ஆம் ஆண்டுகளில் முத்திரைக் கட்டணத் தகவல்களை கோரி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்பது. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தின் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது நெடுஞ்சாலைகள் மற்றும் கிளை வீதிகள் தொடர்பான காரணிகளை முறைப்படுத்துதல் மற்றும் நிர்வகித்தல், மக்களின் நன் நடத்தை, வசதிகள் மற்றும் நலன் ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டி இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட காரணிகள் கீழே தரப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபைச் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 30 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக துணைச் சட்டங்கள் இயற்றக்கூடியதாக இருந்த போதிலும் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் அந்த விடயங்களுக்காகத் துணைச் சட்டங்கள் இயற்றப்பட்டிருக்கவில்லை. | மாகாண சபையினால் இயற்றப்பட்டிருந்த அங்கீகரிக்கப்பட்ட துணைச் சட்டங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள் ளது என்பது. | துணைச் சட்டங்களை இயற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபை அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசங்களில் நில அளவைத் திட்டம் மற்றும் வீதி வரைபடம் என்பவற்றுக்கான அனுமதி பெற்றுக்கொள்ளல் மேற்கொள்ளப்படாது நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அது தொடர்பில் கடமையாற்றுவதற்காக உத்தியோகத்தரும் சபையினால் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என்பது. | உத்தியோகத்தர் ஒருவரை நியமித்து குறித்த பணியினை நிறைவேற்றுதல் வேண்டும். |
| (ஆ) | புப்போகம நூலகத்துடன் இணைந்ததாக அமைந்துள்ள வளமான தென்னைகளைக் கொண்ட 02 ஏக்கர் காணியினைக் குத்தகைக்கு வழங்குவதற்கு அல்லது சபையின் ஊழியர்களை ஈடுபடுத்தி பராமரித்து வருமானத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு சபை நடவடிக்கை எடுத்து இருக்காதடன் அந்தக் காணியில் வேலி மற்றும் படலை அமைக்கப்பட்டிருக்காததால் நகரவாசிகள் குப்பைகளை அந்த இடத்தில் கொட்டுதல் இடம் பெற்றுள்ளது. | - மேற்படி - | வருமானத்தினைப் பெற்றுக் கொள்வதற்காகத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் காணியின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும். |

### 3.3 செயலற்ற அல்லது குறை பயன்பாடுடைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் கருவிகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | LDSP கருத்திட்டத்தின் கீழான நிதிகளில் இருந்து ரூபா. 9,236,000 செலவில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் 2023 ஆம் ஆண்டிலும் செயலற்று காணப்பட்டது. | கருத்து தெரிவிக்கப்பட்டு இருக்கவில்லை என்பது. | பயன்படுத்துவதற்குத் தேவையான வழிவகைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 2022 ஆம் ஆண்டில் ஹிங்குருவெவ பிரதேசத்தில் ரூபா. 19,741,026 செலவில் நிர்மாணிக்கப்பட்டு இருந்த பல்நோக்கு கட்டடம் மற்றும் கிணறு என்பன பயன்பாடு இன்றி காணப்பட்டது. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (இ) | குடிநீர் போத்தலில் அடைத்தல் கருத்திட்டத்தினை ஆரம்பிப்பதற்கு 2022 ஜூலை மாதத்தில் கொள்வனவு செய்யப்பட்ட நீர் தாங்கி, நீர் தாங்கியை வைக்கும் தூண், நிர்மாணிக்கப்பட்ட குழாய் கிணறு மற்றும் ரூபா. 2,676,082 பெறுமதியான போத்தல்கள் மற்றும் ரூபா. 88,233 பெறுமதியான போத்தல் தொகையொன்று பயன்பாடின்றி காணப்பட்டது. | - மேற்படி - | - மேற்படி - |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 02 முச்சக்கர வண்டிகளும். ஒரு கை டிராக்டரும் திருத்தப்பட்டு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது தரித்து வைக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என்பது. | திருத்தப்பட்டு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | பயன்பாட்டில் இருந்து அகற்றப்பட்டு 01 வருடம் தொடக்கம் 05 வருடத்திற்கும் அதிக காலம் கடந்திருந்த 02 வாகனங்களை அகற்றுவதற்கு 2023 ஆம் ஆண்டிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த ஒரு வாகனத்தினை மீண்டும் பிரதான செயலாளரிடம் ஒப்படைப்பதற்கும் மற்றைய வாகனத்தின் உரிமையை சபையிடம் பெற்றுக் கொண்டு அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

## 3.5 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தனியார் நிறுவனத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தேங்காய் எண்ணெய் எடுக்கும் கருவியை ரூபா. 375,000 இற்கு கொள்வனவு செய்வதற்கு பொருத்தமானது என தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு பரிந்துரை செய்திருந்த போதிலும் அந்த இயந்திரம் துறையில் அரிதானது எனக் குறிப்பிட்டு பெறுகைக் குழு வேறு நிறுவனத்திடம் இருந்து கொள்வனவு செய்வதற்குத் தீர்மானித்ததனால் ரூபா. 141,000 அதிகமாக செலுத்துவதற்கு நேரிட்டிருந்தது. | உதிரிப் பாகங்கள் மற்றும் சேவை வசதிகள் என்பவற்றைக் கருத்தில் கொண்டு பெறுகைக் குழு அந்த தீர்மானத்தினை எடுத்திருந்தது என்பது. | கொள்வனவு செய்யும் போது தொழில்நுட்ப குழுவின் பரிந்துரை மற்றும் மொத்த செலவு குறைவடைதல் போன்ற விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுத் தீர்மானம் எடுக்கப்படுதல் வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1. வருடாந்த செயல் திட்டம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தயாரிக்கப்பட்டிருந்த வருடாந்த செயல் திட்டத்திற்கு அமைய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டி இருந்த 08 பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்காதுடன் அந்த செயல்களுக்காக செலவு மதிப்பீடும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டில் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என்பது. | திட்டமிடப்பட்ட கருத்திட்டங்கள் குறித்த ஆண்டினுள் நிறைவேற்றப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 2023 ஆம் ஆண்டுக்கான பாதீட்டுக்கு அமைய அதிகாரப் பிரதேசத்தில் பயன்பாட்டு அபிவிருத்திக்காக ரூபா. 1,500,000 ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அந்த செயல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | திட்டமிடப்பட்ட கருத்திட்டத்தினை உரிய ஆண்டினுள் நிறைவேற்றுதல் வேண்டும். |

**4.2. சுற்றாடல் பிரச்சினைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் கழிவு சேகரித்தலை 2023 ஆம் ஆண்டிலும் சபை தவிர்த்திருந்தது. | கழிவுகளை அகற்றுவதற்கு காணி ஒன்று இல்லாததால் கழிவுகளை சேகரித்தல் இடம்பெறவில்லை என்பது. | முறையாகக் கழிவுகளை அகற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |